**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

**Case No. CC.No. 35 of 2020**

**Prosecution Witness: PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சக்கரவர்த்திஅசோகன் | **Caste** | : |
| **Father's Name** | : ஜான்ஹென்றி | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present).**

**Dated.31.01.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி கண்டோன்மெண்டில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது இலால்குடி ஆசிரியர் காலனியில் வசித்து வந்தேன். நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன், அ.சா.1 என்னுடைய அம்மா ஆவார், சாட்சி 2 என்னுடைய அப்பா ஆவார், அவர் தற்போது உயிரோடு இல்லை. நான் கடந்த 27.12.2019 ம் தேதி எலெக்ஷன் டுட்டியை முடித்துவிட்டு இலால்குடியில் உள்ள எனது வீட்டிற்கு வந்து மாடியில் உள்ள அறைக்கு சென்றுவிட்டேன், அ.சா.1 எங்களது வீட்டின் மெயின்கேட்டை பூட்டிவிட்டு மற்ற கதவுகள் பூட்டாமல் அம்மா இரண்டாவது அறையிலும், எனது அப்பா முதல் அறையிலும் தூங்கி கொண்டிருந்தார்கள். மறுநாள் 28.12.2019 ம் தேதி காலை 6 மணியளவில் சத்தம் கேட்டது, நானும், எனது அப்பா சாட்சி 2 ம் வந்து பார்த்த போது எனது அம்மா தொடர்ந்து சத்தம் போட்டு கொண்டே இருந்தார், எனது அம்மா படுத்திருந்த அறைக்கு பக்கத்தில் உள்ள அறையிலிருந்து எதிரி சுகுமார் எனது அம்மா அணிந்திருந்த கருகமணியுடன் தாலிசெயினை பறித்து கொண்டு மெயின்கேட்டை தாண்டி போய் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த

TN 48 AM 1419 Honda Dio இருசக்கர வாகனத்தில் ஏறி தப்பி சென்றுவிட்டார். அந்த செயினின் மதிப்பு ரூ.30,000/- ஆகும். தாலிசெயினின் எடையானது 1-1/2 பவுன் ஆகும். எனது அம்மாவிடம் சம்பவம் குறித்து விசாரித்த போது எதிரி சுகுமார் நான் போட்டிருந்த செயினை பறித்துவிட்டதாகவும், நெஞ்சில் மிதித்ததாகவும் கூறினார், அதில் அவருக்கு வலது கண்ணத்திலும், இடது கால் முட்டியிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. அதன் பிறகு வழக்கு சம்பவம் தொடர்பாக இலால்குடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம், காயம்பட்ட எனது அம்மாவிற்கு இலால்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம், புறநோயாளியாக அவர் சிகிச்சை பெற்று கொண்டார். இவ்வழக்கின் எதிரியான சுகுமார் (எ) மூளை எனக்கு தெரியும். அவர் எங்கள் வீட்டுக்கு பால் ஊற்றும் நபர் ஆவார். போலிசார் விசாரிக்க விவரம் சொன்னேன். ஆஜர் எதிரி தான் சம்பவ தினத்தன்று வழக்கில் ஈடுபட்டவர் ஆவார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

நான் நிரந்தரமாக திருச்சியில் தான் வசித்து வருகிறேன். எனது அப்பாவிற்கும், எதிரியின் அப்பாவிற்கும் பால் பணம் தொடர்பாக வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து 10 நாட்களுக்கு முன்பாகவே தகராறு இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் தேர்தல் பணி முடிந்து வந்தவுடன் 28.12.2019 அன்று நான், எனது அப்பா, அம்மா ஆகியோருடன் மேலவாழையில் உள்ள பாலசுப்ரமணியன் வீட்டிற்கு சென்றிருந்தோம் என்றால் சரியல்ல. நானும், காவல் ஆய்வாளரும் 28.12.2019 அன்று காலை 7 மணிக்கு பாலசுப்ரமணியன் வீட்டிற்கு சென்றோம். அங்கு பாலசுப்ரமணியையும் எதிரியையும் அழைத்து கொண்டு காவல் நிலையத்திற்கு வந்தோம் என்றால் சரியல்ல, எதிரியை மட்டும் அழைத்து வந்தோம். நானும், எனது அம்மாவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது அன்றைய தினம் காலை 11 மணி என்றால் சரிதான். அன்றைய தினம் காலை பாலசுப்ரமணியன் பால் பணம் கேட்டு தனது வீட்டிற்கு வந்த போது ஏற்பட்ட தகராறில் பாலசுப்ரமணியன் எனது அப்பாவை

அடிக்க முற்பட்ட போது அ.சா.1 இடையில் புகுந்து தடுத்ததால் எனது அம்மா அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் எனது அதிகாரத்தை பயன்படுத்தி காவல் ஆய்வாளர் உதவியோடு வீட்டில் உள்ள பாலசுப்ரமணியனையும், எதிரியையும் நிலையத்திற்கு அழைத்து வந்தோம் என்றால் சரியல்ல. அதனால் எதிரி, காவல் ஆய்வாளரை திட்டியதால் என்னிடம் திருட்டு புகாரை பெற்று கொண்டு எதிரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தில் எதிரி ஈடுபடவில்லை என்றும், வேறு எந்த வழக்கும் எதிரியின் மீது இல்லை என்று சொன்னால் அன்பிலில் இதுபோல் எதிரி ஈடுபட்டுள்ளதாக சொன்னார்கள். அதனால் தான் எனது வீட்டில் உள்ள நகையை எதிரி திருடிவிட்டதாக சொல்லிவிட்டு அந்த நகையை எனது அம்மா கோவில் உண்டியலில் போட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் சோழன்குடி பகுதியில் தேர்தல் பணி பார்த்தேன். நான் கேள்விபட்டு வந்து தான் எனது அம்மா கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

**Case No. CC.No.35 of 2020**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சிவா | **Caste** | : |
| **Father's Name** | : பிரமநாதன் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present.)**

**Dated.31.01.2023.**

**முதல் விசாரணை**

நான் இலால்குடி தெற்குத்தெருவில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது, ஆஜர் எதிரியை தெரியாது, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

குு.வி (அரசு தரப்பில்)

கடந்த 27.12.2019 ம் தேதி அ.சா.2 எலெக்ஷன் டுட்டிக்கு சென்றவிட்டு அ.சா.1 ன் வீட்டிற்கு வந்தார் என்றும், வாசல் கேட்டை மட்டும் பூட்டிவிட்டு மெயின் கதவை பூட்டாமல் சும்மா சாத்தி மட்டும் வைத்துவிட்டு மாடிக்கு தூங்க சென்றார் என்றும், அ.சா.1, அவரது கணவர் சாட்சி 2 ம் தனித்தனி அறையில் தூங்கி உள்ளார்கள் என்றும், 28.12.2019 ம் தேதி அதிகாலை 6 மணியளவில் அவர்கள் தூங்கி கொண்டிருக்கும் போது சாத்தியிருந்த வீட்டில் எதோ சத்தம் கேட்டது என்றும், அ.சா.1 அவரது அறையில் உள்ள லைட்டை போட்ட போது

ஆஜர் எதிரியானவர் ஏற்கனவே வீட்டின் உள்ளே வந்து கதவை சாத்திவிட்டு நின்று கொண்டிருந்தார் என்றும், அதை பார்த்துவிட்டு அ.சா.1 நீ ஏன்டா இங்க வந்து நிக்கிற எப்படிடா உள்ள வந்த என்று கேட்டு கொண்டிருக்கும் போதே எதிரியானவர் அ.சா.1ன் வாயை பொத்தி தூக்கி சென்று வீட்டின் கடைசி அறையில் தள்ளினார் என்றும், தள்ளியபோது அ.சா.1 கீழே விழுந்துள்ளார் என்றும், அவர் கீழே விழுந்து சத்தம் போட்டு கொண்டிருக்கும் போது எதிரியானவர் அ.சா.1ன் நெஞ்சில் காலை வைத்து அமுக்கி கொண்டு கழுத்தில் இருந்த கருகமணி கோத்த 1-1/2 பவுன் எடையுள்ள சிலுவை போட்ட தாலியுடன் கூடிய தங்க செயினை அறுத்த போது அ.சா.1 அந்த செயினை அறுக்கவிடாமல் கத்தியுள்ளார் என்றும், அதை காதில் வாங்காமல் கழுத்தில் இருந்த செயினை அறுத்தார் என்றும், அறுத்து கொண்டு ஓடும் போது சத்தம் கேட்டு அ.சா.1ன் கணவரும், அ.சா.2ம் ஓடிவந்த போது எதிரியானவர் தாலிசெயினை எடுத்து கொண்டு வெளியில் நின்ற TN 48 AM 1419 என்ற Dio இருசக்கர வாகனத்தில் தப்பித்து வேகமாக ஓடிவிட்டார் என்றும், தாலியின் மதிப்பானது ரூ.30,000/- இருக்கும் என்றும், ஆஜர் எதிரியானவர் அ.சா.1யை கீழே தள்ளி செயினை அறுத்த போது அ.சா.1க்கு வலது கண்ணத்திலும், இடது கால் முட்டியிலும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டது என்றும், மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தெரிந்து கொண்டு அ.சா.1யை விசாரித்த போது மேற்படி சம்பவம் குறித்து தன்னிடம் கூறினார் என்றும், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த விவரங்களை மறைத்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) -</u> இல்லை